மாவட்ட உரிமையியல் மற்றம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,திருச்சுழி.

அசல் வழக்கு எண். 311/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44 வது பிரிவு 5 ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.P.மாரிமுத்து, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : குழந்தை ஆனந்தம் (வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

02.03.2023

முதல் விசாரணை:–

1. நான் இந்த வழக்கின் வாதிகள் தரப்பு 1 வது சாட்சி ஆவேன். என்தரப்பு முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தை படிக்க கேட்ட பின்புதான் கையொப்பம் செய்தேன். 06.10.1994 ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற ஓ.எஸ்.எண்.41/1993 வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும். 18.01.1991 ம் தேதியிட்ட மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற ஓ.எஸ்.எண்.359/1990 வழக்கில் ஐ.ஏ.எண்.1019/1990 மனுவின் அபிடவிட்டு மனு மற்றும் உத்தரவின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும். 25.09.2017 ம் தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள வீட்டுவரி இரசீதுகள் இரண்டின் அசல் வா.சா.ஆ.3 ஆகும். வாதியின் பெயரில் உள்ள மின்கட்டண இரசீதுகள் மூன்று அசல் வா.சா.ஆ.4 ஆகும். 18.12.2019 ம் தேதியிட்ட 1 முதல் 4 பிரதிவாதிகள் 5 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.